தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 357/ந/2023
நாள் 20.12.2023

திரு.வீ.பாஸ்கரன்,
குன்னூர், நீலகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி. – எதிர் மனுதாரர்

நீலகிரி மாவட்டம், குன்னூர், சமயபுரம் ஆள்வார்பேட்டை, க.எண்.133, 134 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வீ.பாஸ்கரன் என்பவரின் 18.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.09.2023 அன்று பெறப்பட்டு 357/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், குன்னூர், சமயபுரம் ஆள்வார்பேட்டை, க.எண்.133, 134 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வீ.பாஸ்கரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் சிவகங்கை நகராட்சியில் ஆணையாளர் நிலை 1–ல் இருந்து 31.10.2022 அன்று பணி நிறைவு பெற்றுவிட்டேன். நான் உசிலம்பட்டி நகராட்சியில் கடந்த 12.08.2021 முதல் 29.01.2022 வரை சுமார் ஐந்து மாதங்கள் 15 நாட்கள் மட்டுமே ஆணையாளர் (நிலை–2)–ல் பணிபுரிந்துள்ளேன். அதன் பிறகு பதவி உயர்வின் மூலம் ஆணையாளர் நிலை 1–ல் அருப்புக்கோட்டை நகராட்சியில் 26.10.2022 பிற்பகல்முதல் பணியேற்றுக் கொண்டேன்.

நான் சிவகங்கை நகராட்சியில் ஆணையாளர் நிலை 1–ல் இருந்து 31.10.2022 அன்று பணி நிறைவு பெறுவதையொட்டி உசிலம்பட்டி நகராட்சியில் பணிப்புரிந்த காலத்திற்கு தடையின்மை சான்று கோரி ஆணையாளர் சிவகங்கை நகராட்சியிலிருந்து கடிதம் ந.க.எண்.2568/2021/சி1 நாள் 14.06.2022–ல் உசிலம்பட்டி நகராட்சியில் கோரப்பட்டது.

நான் பணிபுரிந்த காலத்திற்கு மேற்படி உசிலம்பட்டி நகராட்சியிலிருந்து செப்டம்பர் மாதம் 2022 வரை தடையின்மை சான்று அனுப்பவில்லை.

நான் உசிலம்பட்டி நகராட்சிக்கு 14.09.2022–ல் அலைபேசியில் தொடர்புகொண்டு தடையின்மை சான்று கோரியதற்கு தாங்கள் பணிபுரிந்த காலத்திற்கு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, மதுரை அவர்களால் தணிக்கை தடைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதனை தாங்கள் நிவர்த்தி செய்த பின்புதான் தடையின்மை சான்று வழங்குவது குறித்து முடிவெடுக்க இயலும் என வாய்மொழியில் ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.க.முத்து அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

நான் பணி நிறைவு பெற ஒரு மாத காலமே நிலுவையில் இருந்த காரணத்தால் சம்பந்தப்பட்ட உசிலம்பட்டி நகராட்சிக்கு நேரில் சென்று தணிக்கைத் தடைகளின் விவரங்கள் கோரி மொத்தமுள்ள 14 பத்திகளில் 13 பத்திகள் நான்குமுறை உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகம், மதுரை சென்று பத்திகள் நிவர்த்தி செய்யப்பட்டன.

மீதமுள்ள ஒரு தணிக்கைப்பத்தி உள்ளாட்சி நிதித்தணிக்கை வருவாய் மற்றும் மூலதன நிதியில் தணிக்கைப்பத்தி எண்.18 ஆ–வில் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு EPF, ESI நிதித் தொகை, செலுத்த வேண்டியதை விட ஒப்பந்ததாரரால் குறைவாக செலுத்தியது சிரிய, குறைபாடு என குறிப்பிட்டு, ரூபாய் 8,14,960/– ஒப்பந்ததாரிடமிருந்து மீளப் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட உரிய துறைகளின் தலைப்புகளில் செலுத்தப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும் என தணிக்கைத் தடை எடுக்கப்பட்டது.

மேற்கண்ட காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மைக்காக துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி, தொடர்ந்து துப்புரவு பணிகளை உசிலம்பட்டி நகராட்சியில் செய்து வரும் ஒப்பந்ததாரர்கள் திரு. ம. பத்மநாபன் மற்றும் திரு. கா.ஹரிகரன் ஆகியோர்களிடம், EPF, ESI தொகைகளை தணிக்கைத் தடையில் குறிப்பிட்டவாறு பிடித்தம் செய்து உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளரான திரு.க.முத்து என்பவர் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மாதா மாதம் வழங்கப்படும் ஒப்பந்தத் தொகையில் பிடித்தம் செய்ய செயல்முறை உத்தரவு பிறப்பித்து, அதன் அடிப்படையில் தணிக்கையில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டு செயல்முறை உத்தரவும் அளிக்கப்பட்டது. ஆனால் தணிக்கையில் உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, மதுரை அவர்களால், தொகை முழுவதும் செலுத்தப்பட்டால்தான் பணி நிறைவு பெறஇருக்கும் ஆணையாளரை பொறுப்பிலிருந்து விடுவிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையிலும், ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத் தொகை பட்டியலில் இருந்து ரூபாய் 4,04,960/– (ரூபாய் நான்கு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) பிடித்தம் செய்யப்பட்டது. எனது சேமநல நிதி தொகையிலிருந்து மீதமுள்ள தொகையான ரூ.4,10,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து பத்தாயிரம்

மட்டும்) செலுத்தப்பட்டு உசிலம்பட்டி நகராட்சி வைப்புத் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டது. அப்போதைய ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.க.முத்து என்பவர், உள்ளாட்சித் தணிக்கைத் துறை, மண்டல இணை இயக்குநர் அவர்களுடனும் மற்றும் இணை இயக்குநர் மதுரை அவர்களுடனும், ஒப்பந்ததாரர்களிடம் தொகையினை முழுமையாக பட்டியலில் இருந்து பிடித்த பின்பு, திரு.வீ.பாஸ்கரன் ஆணையாளர், சிவகங்கை நகராட்சி செலுத்திய தொகையினை திரும்ப வழங்கி விடுவதாக தெரிவித்தார்.

மேற்படி ஒப்பந்ததாரர்களிமிருந்து உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளரால் (பொ) எவ்வித நடவடிக்கையும் குறித்தக் காலத்தில் மேற்கொள்ளப்படாததாலும், நான் பணி நிறைவு பெற குறுகிய காலமே இருந்த காரணத்தாலும், பணி நிறைவு பெறவுள்ள பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மூலமாக அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய காரணத்தாலும், இப்பத்தியிலிருந்து என்னை விடுவிக்க வேண்டிய அவசர அவசியம் கருதி எனது கணக்கில் உள்ள GPF தொகையிலிருந்து செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

தற்பொழுது நான் பணி நிறைவு செய்த பின்பு உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களுக்கு நான் செலுத்திய ரூ.4,10,000/– ஐ திரும்பக் கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும் எந்தவிதமான பதிலும் நாளது தேதி வரை அனுப்பப்படவில்லை.

தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்டு அத்தணிக்கையில் தணிக்கைப் பத்தி எண்.18 ஆ–வில் தெரிவிக்கப்பட்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து தொகையினை பிடித்தம் செய்ய செயல்முறை உத்தரவு பிறக்கப்பட்டும் ரூ. 4,04,960/– ஐ மட்டுமே பிடித்தம் செய்து தொடர்ந்து ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒப்பந்த தொகையில் 01.11.2022 முதல் பிடிக்காமலும், நடவடிக்கை மேற்கொள்ளாமலும், கண்காணிக்க தவறிய பிரிவு எழுத்தர் எச்1, கணக்கர், துப்புரவு ஆய்வாளர், மேலாளர், ஆணையாளர் (பொ) ஆகியோர் இத்தணிக்கை பத்திக்கு கூட்டுப்பொறுப்பாளர்கள்.

இந்நிலையில் என்னால் மேற்கண்ட தணிக்கைத் தடைக்காக செலுத்தப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள், மேற்குறிப்பிட்ட கூட்டுப் பொறுப்பு அலுவலர்களிடம் பிடித்தம் செய்து, உரிய தலைப்பின் கீழ் செலுத்தி எனக்கு வழங்கப்பட வேண்டிய தொகையான ரூ.4,10,000/–ஐ வழங்கிட ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் உசிலம்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 27.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

''திரு. வீ. பாஸ்கரன், ஆணையாளர் (ஓய்வு) என்பவர் உசிலம்பட்டி நகராட்சியில் 12.08.2021 முதல் 26.01.2022 வரை ஆணையாளராக பணிபுரிந்தார். தனியர் வயது முதிர்வின் காரணமாக 31.10.2022 பிற்பகல் ஓய்வு பெற உள்ளதன் காரணமாக, தனியர் பணிபுரிந்த

காலங்களுக்கு தணிக்கை செய்து வழங்கக்கோரி உசிலம்பட்டி நகராட்சி அலுவலக கடித ந.க.எண்.1670/2021/சி1, நாள் 19.07.2022–இல் மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.799/அ1/2022, நாள் 09.09.2022–ல் தனியர் பணிபுரிந்த காலங்களுக்கு தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டது. மேற்படி தணிக்கை அறிக்கையில் தணிக்கை பத்தி எண்.18 அ. ஆ–ல் ஜுலை 2021 முதல் நவம்பர் 2021 வரை தனியார்மய துப்புரவுப்பணி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல்களில் EPF மற்றும் ESI தொகை குறைவாக செலுத்தியது தொடர்பாகவும், குறைவாக செலுத்திய தொகையை ஒப்பந்ததாரரிடம் மீள பெறுமாறும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி அலுவலகக் கடித ந.க.எண்.930/2018/எச்.1, நாள் 14.09.2022 மற்றும் நாள் 30.09.2022–ல் தனியார்மய துப்புரவு பணி ஒப்பந்ததாரர்களுக்கு, குறைவாக செலுத்தப்பட்ட EPF மற்றும் ESI தொகையை உரிய அரசு கணக்கில் செலுத்தி இரசீதினை ஒப்படைக்குமாறு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. செயல்முறை உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள் 31.10.2022–அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற ஒரு மாத காலம் மட்டுமே இருந்த நிலையில், ஒப்பந்ததாரர்கள், ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவிப்பு கடிதங்களுக்கு எந்தவித விளக்கமும் சமர்ப்பிக்காத காரணத்தினால் கீழ்க்கண்ட விபரப்படி ஜுலை 2022, ஆகஸ்ட் 2022 மாத ஊதிய பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டது.

<u>திரு. ஹரிஹரன், தனியார்மய ஒப்பந்ததாரர்</u>

| | | |
|---|---|---|
| மொத்தம் செலுத்த வேண்டிய தொகை | – | <u>ரூ.3,75,035</u> |
| ஜுலை 2022 மாத பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | – | ரூ. 75,000 |
| ஆகஸ்ட் 2022 மாத பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | – | ரூ. 1,00,035 |
| மொத்தம் | – | ரூ.1,75,035/– |

மீதம் செலுத்த வேண்டிய தொகை ரூ.2,00,000/–

<u>திரு. பத்மநாபன், தனியார்மய ஒப்பந்ததாரர்</u>

| | | |
|---|---|---|
| மொத்தம் செலுத்த வேண்டிய தொகை | – | <u>ரூ.4,39,925</u> |
| ஜுலை 2022 மாத பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | – | ரூ. 75,000 |
| ஆகஸ்ட் 2022 மாத பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | – | ரூ. 1,64,925 |
| மொத்தம் | – | ரூ.2,39,925/– |

மீதம் செலுத்த வேண்டிய தொகை ரூ.2,00,000/–

மீதமுள்ள தொகை ரூ.4,10,000/–ஐ திரு.வீ.பாஸ்கரன் என்பவர் அவரது பெயரில் நகராட்சி அலுவலக கருவூலகத்தில் செலுத்தி மேற்படி தொகையை வைப்பு தொகைக் கணக்கில் வைக்குமாறும், மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்து ஈடுசெய்த பிறகு அவருக்கு திருப்பி வழங்குமாறும் 11.10.2023–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மண்டல இணை இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.1810/அ2/2022, நாள் 14.10.2022–ல் மேற்படி பத்திகளில் திரு.வீ.பாஸ்கரன் (ஆணையாளர் பொறுப்பு) விடுவிக்கப்பட்டு தடையின்மைச்சான்று உசிலம்பட்டி நகராட்சி அலுவலக கடித ந.க.எண்.1670/2021/சி1, நாள் 14.10.2022–ல் சிவகங்கை நகராட்சிக்கு அனுப்பப்பட்டது. மேற்படி தனியார்மய ஒப்பந்த காலம் 30.04.2023–ல் முடிவடைந்துவிட்டது.

தனியார்மய ஒப்பந்ததாரர்கள் தணிக்கைத் தடையில் தெரிவிக்கப்பட்ட தொகையினை செலுத்தாத காரணத்தினால் அவர்கள் ஒப்பந்தப் பணிக்கு செலுத்திய பாதுகாப்பு வைப்பு தொகை தலா ரூ.2,00,000/– வீதம் ரூ.4,00,000/– தற்போது வரை திரும்ப வழங்கப்படாமல் வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், திரு.வீ.பாஸ்கரன், ஆணையாளர் (ஓய்வு) என்பவரின் 12.07.2023, 21.09.2023–ம் தேதியிட்ட கடிதங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒப்பந்ததாரர்களுக்கு தொகை செலுத்தக்கோரி 27.09.2023, 10.10.2023–ல் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் உசிலம்பட்டி நகராட்சி ஆணையரும் 29.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.வீ.பாஸ்கரன், 29.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"நான் சிவகங்கை நகராட்சியில் ஆணையாளராகப் பணியாற்றி 31.10.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். ஏற்கனவே உசிலம்பட்டி ஆணையராகப் பணியாற்றிய நான், வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் நிலையில், நான் ஆணையாளராகப் பணியாற்றியிருந்த உசிலம்பட்டி நகராட்சியில் தடையில்லா சான்று (NOC) வேண்டிக் கேட்டுக்கொண்டதில், நான் பணியாற்றிய காலத்திற்கு தணிக்கைத் தடைகள் உள்ளன என்றும், தணிக்கைப் பத்தி எண் 18ல் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு EPF, ESI தொகை செலுத்த வேண்டியதைவிட ஒப்பந்ததாரரால் குறைவாக செலுத்தப்பட்டுள்ளது என தெரிவித்து, உசிலம்பட்டி நகராட்சி ஆணையராகப் பணியாற்றிய என்னை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்க மேற்கண்ட EPF, ESI தொகையான ரூபாய் 8,14,960/–ல் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத் தொகை பட்டியலிருந்து ரூபாய் 4,04,960/– மற்றும் எனது சேமநல நிதி தொகையிலிருந்து ரூபாய் 4.10 இலட்சமும் நகராட்சி வைப்புத் தொகை கணக்கில் வரவு

வைக்கப்பட்டதைத் தொடர்ந்து எனக்கு NOC வழங்கப்பட்டது. NOC வழங்கப்பட்டப் பின்னர் நான் ஆணையாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டேன்.

எனவே, உசிலம்பட்டி நகராட்சியில் நான் பணியாற்றிய காலத்தில், தணிக்கைத் தடையில் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு EPF, ESI தொகை செலுத்த வேண்டியதைவிட ஒப்பந்ததாரரால் குறைவாக செலுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தணிக்கைத் தடைக்காக செலுத்தப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் கூட்டுப் பொறுப்பு அலுவலர்களிடம் பிடித்தம் செய்து, அதனை நகராட்சி உரிய தலைப்பில் செலுத்தி, என்னிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ரூ.4.10 இலட்சத்தை உசிலம்பட்டி நகராட்சி திருப்பி அளித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான உசிலம்பட்டி நகராட்சி ஆணையர் (பொறுப்பில்) பணிபுரியும் திரு. ஜோ.காந்தி என்பவர் 29.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''உசிலம்பட்டி நகராட்சியில் 12.08.2021 முதல் 29.01.2022 வரை திரு. வீ. பாஸ்கரன் என்பவர் ஆணையாளராகப் பணிபுரிந்த காலத்தில், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் EPF, ESI தொகை, சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரால் உரிய கணக்கில் ரூ.8,14,960/– செலுத்தப்படாதது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறை தணிக்கைத் தடை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்காணும் ரூ.8.14.960/– தொகையில் ரூ.4,04,960/– தொகை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத் தொகை மூலம் செலுத்தப்பட்டதில் மீதம் ரூ.4,10,000/– செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்துள்ள நிலையில், மனுதாரர் திரு வீ.பாஸ்கரன், 31.10.2022 அன்று ஆணையர் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டியிருந்ததால் தணிக்கைத் தடையை நீக்கும் வகையில் நிலுவையிலிருந்த ரூ.4,10,000/– தொகையினை தனது சேமநல நிதியிலிருந்து செலுத்தியிருந்தார். மேற்கண்ட தொகையான ரூ.4,10,000/–ஐ மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் நகராட்சியில் செலுத்தியுள்ள டெபாசிட் தொகையானரூ.4,00,00/– த்திலிருந்து மனுதாரருக்கு வழங்க 15 நாட்களில் நோட்டீஸ் அனுப்பப்பட்டு, மேலும் 15 நாட்களில் மனுதாரருக்கு சேரவேண்டிய மேற்கண்ட தொகை வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், உசிலம்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

ஓய்வு பெற்ற நகராட்சி ஆணையாளரும் மற்றும் மனுதாரருமான நீலகிரி மாவட்டம் குன்னூரை சேர்ந்த திரு.வீ.பாஸ்கரன் என்பவர் தனது 18.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், தான் உசிலம்பட்டி நகராட்சியில் ஆணையாளராக பணியாற்றிய காலத்தில் நகராட்சியில் பணிபுரியும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் EPF மற்றும் ESI சம்பந்தப்பட்ட தொகை

ஒப்பந்ததாரர்களால் விதிப்படி உரிய கணக்கில் முழுமையாக செலுத்தப்படவில்லை எனவும், ஒப்பந்தப் தூய்மை பணியாளர்களின் EPF மற்றும் ESI தொகையில் செலுத்தப்படவேண்டிய ரூ.4.10 இலட்சத்தை ஆணையாளராக பணிபுரிந்த தனது சேமநல நிதியிலிருந்து செலுத்தியிருப்பதாகவும் அத்தொகையை நகராட்சி திரும்ப வழங்குமாறும் கோரியுள்ளார்.

திரு.வீ.பாஸ்கரன் என்பவர் சிவகங்கை நகராட்சி ஆணையாளர் பணியிலிருந்து வயது முதிர்வின் காரணமாக 31.10.2022 அன்று ஒய்வு பெற்றுள்ளார். அவர் உசிலம்பட்டி நகராட்சியில் 12.08.2021 முதல் 29.01.2022 (சுமார் 5 1/2 மாதங்கள்) வரை ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் EPF, ESI தொகை, சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரால் உரிய கணக்கில் முழுமையாக செலுத்தப்படாதது சம்பந்தமாக ரூ.8,14,960/– உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கைத் தடை எழுப்பப்பட்டன.

மேற்காணும் ரூ.8,14,960/– தொகையினை பிடித்தம் செய்வது சம்பந்தமாக உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் பட்டியல் தொகையிலே ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்ய செயல்முறை ஆணைகள் பிறப்பித்து அதனடிப்படையில் ஒப்பந்ததாரரிடமிருந்து ரூ.4,04,960/– பிடித்தம் செய்யப்பட்டது. மீதம் ரூ.4,10,000/– நிலுவை இருந்துள்ள நிலையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் தொடர்ச்சியாக பிடித்தம் செய்யப்படாமல் விட்டதோடு, வைப்புத் தொகையினை ஈடுசெய்ய நகராட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் மனுதாரர் திரு. வீ. பாஸ்கரன், தான் பணியில் இருந்து ஓய்வு பெற வேண்டி இருந்ததால் மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.4,10,000/– ஐ முழுமையாக செலுத்தினால் மட்டும் ஓய்வு பெற ஏதுவாக தடையில்லாச் சான்று சம்பந்தப்பட்ட நகராட்சியில் வழங்க இயலும் என நகராட்சி ஆணையர் தெரிவித்ததன் அடிப்படையில் தான் முழு தொகையினையும் செலுத்தியுள்ளார்.

12.08.2021 முதல் 29.01.2022 வரையுள்ள காலத்தில் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் கணக்கில் EPF மற்றும் ESI தொகையான ரூ.4.10 இலட்சம் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரால் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்ததால் மனுதாரர் திரு.வீ.பாஸ்கரன் தனது சேமநல நிதியிலிருந்து செலுத்தி உள்ளார். இதை ஈடுகட்டும் வகையில், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் நகராட்சியில் செலுத்தியுள்ள ரூ.4/– இலட்சம் வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மனுதாரருக்கு வழங்க ஒப்பந்ததாருக்கு 15 நாட்கள் கால அவகாசம் அளித்து ஒரு அறிவிப்பு வழங்கி, அதன்பிறகு 15 நாட்களுக்குள் மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையை வழங்கப்படும் என உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர் நடவடிக்கையாக ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பிடித்தம் செய்வதை இடையில் நிறுத்தியதோடு அவர்களிடமிருந்து வைப்புத் தொகையினை ஈடு செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காத H1 எழுத்தர், கணக்கர், மேலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலரையும் இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. ஓய்வு பெற இருப்பவருக்கு சட்டப்படி உதவ போதுமான வழிமுறைகள் இருந்தும், செயல்படுத்த தவறியதோடு, சம்பந்தப்பட்ட நபரே சொந்த பணத்திலிருந்து முழுத்தொகையும் செலுத்த மறைமுகமாக ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தி மனிதாபிமானம் அற்ற முறையில் செயல்புரிந்த நபர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் ஓய்வுபெற்ற நகராட்சி ஆணையாளர் திரு.வீ.பாஸ்கரன் என்பவருக்கு சேர வேண்டிய தொகையினை 30 நாட்களுக்குள் வழங்கி, அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளில் நகராட்சியில் பணிபுரியும் ஒப்பந்தப் பணியாளர்களின் EPF , ESI போன்ற இனங்களுக்குண்டான தொகையினை உரிய அரசு கணக்கில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களால் விடுபடாமல் முழுமையாக ஒவ்வொரு மாதமும் செலுத்தி வருவதை ஆய்வு செய்து, உறுதி செய்த பின்னரே பட்டியல் தொகை விடுவிக்குமாறு உசிலம்பட்டி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வீ. பாஸ்கரன்,
க. எண். 133, 134, சமயபுரம் ஆள்வார்பேட்டை,
குன்னூர் – 643 101, நீலகிரி மாவட்டம்.

2) ஆணையாளர், உசிலம்பட்டி நகராட்சி,
மதுரை மாவட்டம் – 625 532.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

21/12/23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032